லஞ்ச வழக்கில் தொழிலாளர் நல அலுவலருக்கு 4 ஆண்டுகள் சிறை

கும்பகோணம் ஆக. 29: லஞ்ச வழக்கில் தொழிலாளர் நல உதவி ஆய்வாளருக்கு வியாழக்கிழமை 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

தஞ்சாவூரைச் சேர்ந்த பாத்திரக் கடை வியாபாரி அந்தோணிசாமி கடந்த 2013-ஆம் ஆண்டு தொழில் உரிமம் புதுப்பிக்கவும் மற்றும் மின்னணு இயந்திர தராசை புதுப்பித்து முத்திரை பெறவும் தொழிலாளர் நலத்துறை அலுவலகத்தில் விண்ணப்பித்தார்.

அப்போது தொழிலாளர் நலத் துறை உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்த ஜெயலெட்சுமி ரூ. 2,500 லஞ்சம் கேட்டாராம். இதையடுத்து அந்தோணிசாமி தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் புகார் செய்தார். இதையடுத்து கடந்த 2013 ஜூலை 8 இல் ஜெயலெட்சுமி லஞ்சம் வாங்கியபோது கைது செய்யப்பட்டார்.

கும்பகோணம் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடந்த வழக்கை வியாழக்கிழமை விசாரித்த நீதிபதி சண்முகப்பிரியா ஜெயலட்சுமிக்கு ஊழல் தடுப்புச்சட்டம் பிரிவு 7-ன் கீழ் மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை, ரூ. 5000 அபராதமும் பிரிவு 13 (1)(க்), 13(2)-இன் கீழ் ஓராண்டு கடுங்காவல் தண்டனை, ரூ.1000 அபராதமும் விதித்து, சிறை தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்கவும் உத்தரவிட்டார்.

சாலையோர சிறுகடை விற்பனையாளர்கள் ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர், ஆக. 29: தமிழ்நாடு முழுவதும் ஒரே நேரத்தில் வணிகக் குழுத் தேர்தலை நடத்தக் கோரி தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலகம் முன் சிஐடியு சார்ந்த தஞ்சை மாவட்ட சாலையோர சிறுகடை விற்பனையாளர்கள் சங்கத்தினர் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில், மாநிலம் முழுவதும் ஒரே நேரத்தில் வணிகக் குழுத் தேர்தலை நடத்த வேண்டும். வணிகக் குழுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு வியாபாரிகளுக்கு ஒதுக்க வேண்டும். சாலையோர வியாபாரிகளை சட்டத்துக்கு விரோதமாக அப்புறப்படுத்துவதை நிறுத்த வேண்டும். சாலையோர வியாபாரிகள் பாதுகாப்புச் சட்டத்தை ஊராட்சிப் பகுதிகளுக்கு விரிவுபடுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன. சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஆர். மணிமாறன் தலைமை வகித்தார். சிஐடியு மாநிலச் செயலர் சி. ஜெயபால் கோரிக்கையை விளக்கினார். தரைக் கடை சங்க மாவட்டச் செயலர் எஸ். மில்லர் பிரபு, சங்க நிர்வாகிகள் பாண்டியன், சார்லஸ், திலகவதி, தங்கையன், அப்துல் காதர், காஞ்சனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கறம்பக்குடி ஒன்றிய அலுவலகத்தில் புதிய கட்டடம் கட்ட அடிக்கல்

ஆலங்குடி, ஆக. 29: புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ரூ. 5.48 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடத்திற்கான பணிகளை மாநில சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் வியாழக்கிழமை அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கிவைத்தனர்.

கறம்பக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் மு.அருணா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் கந்தர்வக் கோட்டை சட்டப்பேரவை உறுப்பினர் எம். சின்னத்துரை, வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு 40 நாள்களுக்குள் தீர்வு

முரசொலி எம்.பி. வலியுறுத்தல்

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டத்தில் பேசிய மக்களவை உறுப்பினர் ச. முரசொலி.

தஞ்சாவூர், ஆக. 29: பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கைகள் மீது அலுவலர்கள் 40 நாள்களுக்குள் தீர்வு காண வேண்டும் என்றார் தஞ்சாவூர் தொகுதி மக்களவை உறுப்பினரும், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுத் தலைவருமான ச. முரசொலி.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்துக்கு தலைமை வகித்த அவர் மேலும் பேசியது:

தஞ்சாவூர் மாநகராட்சியில் புதை சாக்கடைப் பராமரிப்பில் போதிய கவனம் செலுத்த வேண்டும். மாவட்டங்களில் உள்ள நீர்நிலைகளில் தண்ணீரை நிரப்பவும், தேவைப்படும் இடங்களில் தூர்வாரும் பணியை மேற்கொள்ளவும் வேண்டும்.

மாவட்டம் முழுவதும் பொதுமக்கள் பட்டா கேட்டு அதிகளவில் மனு அளிக்கின்றனர். மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்களில் ஏராளமானோர் கோரிக்கை மனுக்களை அளிக்கின்றனர். இந்த மனுக்கள் மீது அலுவலர்கள் 40 நாள்களுக்குள் தீர்வு காண வேண்டும்.

மத்திய அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் வீடு கட்டும் திட்டத்தில் நிலுவைப் பணிகள் அதிகமாக உள்ளது. இதை முழுவீச்சில் செயல்படுத்தி நிறைவேற்ற வேண்டும். மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்களில் அலுவலர்கள் தொய்வின்றிப் பணியாற்ற வேண்டும்.

இதுபோன்ற கூட்டங்களில் அரசின் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் பங்கேற்க வேண்டும். இதர பணியாளர்களை அனுப்பி வைக்கக் கூடாது என்றார் முரசொலி.

நோட்டீஸ் அனுப்ப அறிவுறுத்தல்: முன்னதாக, கூட்டம் தொடங்கியபோது அனைத்து துறை உயர் அலுவலர்கள் பங்கேற்றுள்ளனரா என வருகைப் பதிவேட்டில் துறை வாரியாக பார்த்து முரசொலி எம்.பி. கேட்டார். அப்போது, காவல் துறை சார்பில் யாரும் கலந்து கொள்ளாததால் மாவட்டக் காவல் கண்காணிப்பாளருக்கு நோட்டீஸ் அனுப்புமாறு ஆட்சியரிடம் அவர் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் பா. பிரியங்கா பங்கஜம், குழுவின் இணைத் தலைவரும், மயிலாடுதுறை தொகுதி மக்களவை உறுப்பினருமான ஆர். சுதா, மாநிலங்களவை உறுப்பினர் எஸ். கல்யாணசுந்தரம், எம்எல்ஏக்கள் துரை. சந்திரசேகரன், டி.கே.ஜி. நீலமேகம், சாக்கோட்டை க. அன்பழகன், என். அசோக்குமார், எம்.எச். ஜவாஹிருல்லா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ்ச் சுவடியியல் பயிலரங்கம் தொடக்கம்

தஞ்சாவூர், ஆக. 29: தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அரிய கையெழுத்துச் சுவடித் துறை சார்பில் தமிழ்ச் சுவடிகளில் எண்ணும் எழுத்தும் என்கிற இரு நாள் பயிலரங்கம் வியாழக்கிழமை தொடங்கியது.

பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ) சி. தியாகராஜன் தலைமை வகித்தார்.

கணக்கதிகாரம், ஆஸ்தான கோலாகலம் போன்ற தமிழ்க் கணக்குச் சுவடிகளின் பதிப்பாசிரியர் கா. சத்தியபாமா, தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையத் தமிழ்ப் பண்டிதரும், ஏடகம் அமைப்பின் நிறுவனருமான மணி. மாறன் சிறப்புரையாற்றினர்.

முனைவர் த. கண்ணன் வரவேற்றார். முனைவர் பட்ட ஆய்வாளர் ம. யோகேஸ்வரன் நன்றி கூறினார்.

சேவைக் குறைபாடு: தொலைக்காட்சிப் பெட்டி தயாரிப்பு நிறுவனத்துக்கு ரூ. 50 ஆயிரம் அபராதம் விதிப்பு

புதுக்கோட்டை, ஆக. 29: சேவைக் குறைபாட்டுக்காக தொலைக்காட்சிப் பெட்டி தயாரிக்கும் நிறுவனத்துக்கு ரூ. 50 ஆயிரம் அபராதம் விதித்து புதுக்கோட்டை மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் அருகேயுள்ள மெய்யனூரைச் சேர்ந்தவர் வை. சிவகுமார். இவர், காரைக்குடியிலுள்ள ஒரு தனியார் டிவி விற்பனையாளரிடம் 2020-இல் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை ரூ. 32,499-க்கு வாங்கினார்.

2022ஆம் ஆண்டு அந்த டிவி பழுதடைந்தது. நிறுவனத்துக்கு புகார் அளிக்கப்பட்ட போது, புதிய டிவி மாற்றித்தரப்பட்டது.

அந்த டிவியும் 16 நாள்களில் பழுதடைந்தது. இதுபோல பல முறை பழுதடைந்த போது புகார் அளித்தும் டிவி நிறுவனத்தினரின் சேவை மையத்தில் இருந்து முறையான பதில் இல்லை.

இதைத் தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் சிவக்குமார் வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த ஆணையத் தலைவர் த. சேகர் வியாழக்கிழமை தீர்ப்பளித்தார். அதில், டிவியை விற்ற விற்பனையாளரோ அல்லது டிவி நிறுவனத்தினரோ பழுதடைந்த டிவியை மாற்றி புதிதாக வழங்க வேண்டும் அல்லதுடிவி வாங்கப்பட்ட தொகையை வாங்கப்பட்ட நாளில் இருந்து ஆண்டுக்கு 9 சதவிகித வட்டி சேர்த்து நுகர்வோருக்கு வழங்க வேண்டும். சேவைக் குறைபாட்டுடன் செயல்பட்ட காரைக்குடியைச் சேர்ந்த விற்பனையாளர் ரூ. 20 ஆயிரத்தை இழப்பீடாக நுகர்வோருக்கு வழங்க வேண்டும்.

சேவைக் குறைபாடுடன் செயல்பட்ட பெங்களூருவைச் சேர்ந்த தனியார் டிவி உற்பத்தி நிறுவனத்தினர் ரூ. 50 ஆயிரத்தை நுகர்வோருக்கு வழங்க வேண்டும்.

45 நாட்களுக்குள் இந்த இழப்பீட்டுத் தொகையை வழங்காவிட்டால், இழப்பீட்டுத் தொகைக்கு ஆண்டுக்கு 12 சதவிகிதம் வட்டியையும் சேர்த்து வழங்க வேண்டும் என அந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

7.5 சதவிகித ஒதுக்கீட்டில் மருத்துவம் படிக்க புதுகை மாணவர்கள் 38 பேருக்கு வாய்ப்பு

புதுக்கோட்டை, ஆக. 29: மருத்துவக் கல்விக்கான 7.5 சதவிகித இடஒதுக்கீட்டில், கடந்த ஆண்டைவிடவும் கூடுதலாக 19 பேருக்கு நிகழாண்டில் மருத்துவம் பயில்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

நீட் தேர்வின் அடிப்படையில் மருத்துவக் கல்வியில் சேருவற்கு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவிகித இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இதன்படி, கடந்த கல்வியாண்டில் (2023-24) புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசுப் பள்ளியில் பயின்ற 18 பேருக்கு எம்பிபிஎஸ் இடங்களும் ஒருவருக்கு பல்மருத்துவம் படிக்கவும் இடம் கிடைத்தது. நிகழாண்டில் (2024-25) கடந்த வியாழக்கிழமை (ஆக. 22) மருத்துவக் கல்லூரி சேர்க்கைக்கான கலந்தாய்வு தொடங்கியது.

ஒரு வார கால முடிவில் ஆக. 29ஆம் தேதி வரையிலான சேர்க்கைப்படி, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 38 பேருக்கு மருத்துவம் பயில வாய்ப்பு கிடைத்துள்ளது. இவர்களில் 32 பேர் எம்பிபிஎஸ் படிக்கவும், 6 பேர் பிடிஎஸ் படிக்கவும் கல்லூரிகளைத் தேர்வு செய்துள்ளனர். இவர்களில் 17 பேர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், 11 பேர் எம்பிசி சீர்மரபினர் வகுப்பினர், 8 பேர் பட்டியல் வகுப்பினர், 2 பேர் சிறுபான்மையினர்.

இவர்கள் 38 பேரில் ஒருவர் கூட முதல் முறையாக நீட் தேர்வு எழுதி, தேர்ச்சி பெற்றவர்களில்லை. 38 பேரில், 4 பேருக்கு புதுக்கோட்டை மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரியிலேயே சேர்ந்து பயில வாய்ப்பு கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மானியத்தில் பெட்ரோல், டீசல் கோரி ஆட்டோ தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர் / புதுக்கோட்டை, ஆக. 29: ஆட்டோ தொழிலாளர்களுக்கு மானியத்தில் பெட்ரோல், டீசல் வழங்கக் கோரி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகம் முன் தஞ்சை மாவட்ட ஏஐடியுசி ஆட்டோ தொழிலாளர் சங்கத்தினர் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தைத் தனியார்மயமாக்கக் கூடாது. புதிய மோட்டார் வாகன சட்டத் திருத்தத்தைத் திரும்பப் பெற வேண்டும். பெட்ரோல், டீசல், எரிவாயு விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும்.

ஆட்டோ தொழிலாளர்களுக்கு மானியத்தில் பெட்ரோல், டீசல் வழங்க வேண்டும்.

ஆட்டோ தொழிலை சீரழிக்கும் ஓலா, ஊபரை தடை செய்ய வேண்டும். தமிழ்நாடு அரசே ஆட்டோ செயலியை உருவாக்க வேண்டும். 60 வயது முடிந்த ஆட்டோ தொழிலாளிக்கு மாதம் ரூ. 9 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் எஸ். பாலகிருஷ்ணன், செயலர் இரா. செந்தில்நாதன் ஆகியோர் தலைமை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தை ஏஐடியுசி தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி. சந்திரகுமார் தொடங்கிவைத்து பேசினார். மாநிலச் செயலர் ஆர். தில்லைவனம் முடித்து வைத்தார்.

ஏஐடியுசி மாவட்டத் தலைவர் வெ. சேவையா, செயலர் துரை. மதிவாணன், பொருளாளர் தி. கோவிந்தராஜன், தெரு வியாபார சங்க மாவட்டச் செயலர் ஆர்.பி. முத்துக்குமரன், ஆட்டோ சங்க நிர்வாகிகள் மலைச்சாமி, ஆனந்தராமன், சரவணன், ராஜா, கணேசன், ராமச்சந்திரன், மாநகரத் தலைவர் ரமேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை: புதுக்கோட்டையில் தமிழ்நாடு ஆட்டோ போக்குவரத்துத் தொழிலாளர் சம்மேளனம் (ஏஐடியுசி) சார்பில் திலகர் திடலில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் மாவட்டப் பொதுச் செயலர் பா. பாண்டியராஜன் தலைமை வகித்தார்.

ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலர் ப. ஜீவானந்தம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டத் துணைச் செயலர் ஏ. ராஜேந்திரன், மாவட்ட ஏஐடியுசி சிறப்புத் தலைவர் வீ. சிங்கமுத்து, பொருளாளர் டி.எம். கணேசன் உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

பயிர்க் காப்பீடு கிடைக்காத 11 விவசாயிகளுக்கு நிவாரணம்

நுகர்வோர் மன்றம் உத்தரவு

தஞ்சாவூர், ஆக. 29: பயிர்க் காப்பீடு கிடைக்காததால் வழக்கு தொடுத்த தஞ்சாவூரைச் சேர்ந்த 11 விவசாயிகளுக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம் ரூ. 7.96 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும் என நுகர்வோர் குறைதீர் மன்றம் வழங்கிய தீர்ப்பு நகல்கள் வியாழக்கிழமை அவர்களிடம் வழங்கப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டம் கடம்பங்குடி, ஐம்பதுமேல்நகரம் கிராமங்களில் 2017 - 18 ஆம் ஆண்டில் பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கவில்லை.

இதையடுத்து விவசாயிகள் இளமுருகன், செல்லப்பொண்ணு, துரைராஜ், சுப்பிரமணியன், சிதம்பரநாதன், நாராயணசாமி, இந்திரா, கண்மணி, மதியழகன், சுதாகர், பாலமுருகன் ஆகியோர் தஞ்சாவூர் மாவட்ட நுகர்வோர் குறை தீர் நீதிமன்றத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டில் வழக்குத் தொடுத்தனர்.

இந்த வழக்கு பணிச் சுமை காரணமாக கடந்த 2024 ஜனவரி மாதம் கரூர் நுகர்வோர் குறைதீர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

இந்த வழக்கை நுகர்வோர் குறை தீர் மன்றத் தலைவர் பாரி, உறுப்பினர் ரத்தினசாமி ஆகியோர் விசாரித்து, 8 விவசாயிகளுக்கும் நிவாரணமாக தலா ரூ. 57 ஆயிரத்து 375-ம், சேவைக் குறைபாட்டால் புகார்தாரர்களுக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்காக தலா ரூ. 10 ஆயிரமும், வழக்கு செலவு தலா ரூ. 5 ஆயிரமும் என மொத்தம் 11 விவசாயிகளுக்கு ரூ. 7 லட்சத்து 96 ஆயிரத்து 125 வழங்குமாறு ஐம்பதுமேல் நகரம் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்துக்கு உத்தரவிட்டு, கடந்த ஏப்ரல் மாதம் தீர்ப்பளித்தனர்.

இந்தத்தீர்ப்பு நகல்களைத் தொடர்புடைய விவசாயிகள் வழக்குரைஞர்கள் வெ. ஜீவக்குமார், கீர்த்திராஜ், சுந்தரி, உமர்முக்தார், கதிர்வேல், முகம்துபைசல் ஆகியோருடன் தஞ்சாவூர் நீதிமன்றத்துக்கு வியாழக்கிழமை சென்று பெற்றுக் கொண்டனர்.

புதுகை மாவட்டத்தில் நாளைய மின்தடை

புதுக்கோட்டை, ஆக. 29: புதுக்கோட்டை நகரிய துணை மின் நிலையத்தில் வரும் சனிக்கிழமை (ஆக. 31) மின்பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், இங்கிருந்து மின் விநியோகம் செய்யப்படும் பகுதிகளுக்கு காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின்விநியோகம் இருக்காது என உதவிச் செயற்பொறியாளர் ஜி. அன்புச்செல்வன் அறிவித்துள்ளார்.

இதனால் மின்சாரம் தடை செய்யப்படும் பகுதிகள்: புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம், லட்சுமிபுரம், சாந்தநாதபுரம், குமுந்தான்குளம், தெற்கு 4ஆம் வீதி, ஆயுதப்படை குடியிருப்பு, மரக்கடை வீதி, திருவள்ளுவர் நகர், சுப்பிரமணியபுரம், சிராஜ் நகர், ஆண்டவர் நகர்.

மேல ராஜவீதி, கீழ ராஜவீதி, தெற்கு ராஜ வீதி, வடக்கு ராஜவீதி, மார்த்தாண்டபுரம், ஆலங்குடி சாலை, அய்யனார்புரம், கேஎல் கேஎஸ் நகர், நிஜாம் குடியிருப்பு, சத்திய மூர்த்தி நகர், அசோக்நகர், தமிழ் நகர், சக்திநகர், முருகன் குடியிருப்பு, பாலாஜி நகர், திருநகர், சின்னப்பா நகர், இவிஆர் நகர், டைமண்ட் நகர், கோல்டன் நகர்.

சேங்கைதோப்பு, மருப்பிணி நகர், கலீப்நகர், திருவப்பூர், திருக்கோகர்ணம், திலகர்திடல், அம்பாள்புரம், அடப்பன்வயல், காமராஜ்புரம், போஸ் நகர், கணேஷ்நகர்.

திருமயத்தில்... புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் துணை மின் நிலையத்தில் சனிக்கிழமை (ஆக. 31) மின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், இங்கிருந்து மின் விநியோகம் செய்யப்படும் பகுதிகளுக்கு காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின்விநியோகம் இருக்காது என உதவிச் செயற்பொறியாளர் (பொ) ச. கீதாஞ்சலி அறிவித்துள்ளார்.

இதனால் மின் நிறுத்தம் செய்யப்படும் பகுதிகள்: திருமயம், மணவாளங்கரை, இளஞ்சாவூர், ராமச்சந்திரபுரம், கன்னங்காரைக்குடி, ஊனையூர், சவேரியார்புரம், குளத்துப்பட்டி, பட்டணம், மலைக்குடிப்பட்டி, மாவூர், கோனாப்பட்டு, துளையானூர், தேத்தாம்பட்டி, ஆதனூர், வாரியப்பட்டி, கொல்லக்காட்டுப்பட்டி, ராங்கியம், கண்ணனூர், மேலூர், அம்மன்பட்டி, அரசம்பட்டி, வி. லெட்சுமிபுரம், ஏனப்பட்டி, விராச்சிலை, பெல் வளாகம்.

பாஜகவினர் ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர், ஆக. 29: பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையை அவதூறாகப் பேசியதாக தஞ்சாவூர் தலைமை அஞ்சலகம் அருகே அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமியின் உருவப்படத்தை பாஜகவினர் வியாழக்கிழமை மாலை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது எரிந்து கொண்டிருந்த படங்களைக் காவல் துறையினர் தண்ணீர் ஊற்றி அணைத்தனர். ஆர்ப்பாட்டத்துக்கு பாஜக தெற்கு மாவட்டத் தலைவர் பி. ஜெய் சதீஷ் தலைமை வகித்தார். நெசவாளர் அணி மாநிலத் துணைத் தலைவர் யு.என். உமாபதி, மருத்துவர் அணி மாநில நிர்வாகி பாரதி மோகன், பாஜக மாவட்டப் பொதுச் செயலர் ஆர். முரளிதரன், பொருளாளர் வி. விநாயகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மூதாட்டியிடம் நகையை பறிக்க முயற்சி: பக்கத்து வீட்டு இளைஞர் கைது

தஞ்சாவூர், ஆக. 29: தஞ்சாவூரில் மூதாட்டியிடம் வியாழக்கிழமை தங்கச் சங்கிலி பறிக்க முயன்ற பக்கத்து வீட்டு இளைஞரைப் பொதுமக்கள் பிடித்து காவல் துறையிடம் ஒப்படைத்தனர்.

தஞ்சாவூர் கீழவாசல் டபீர் குளம் சாலையைச் சேர்ந்தவர் பிரகாசம் மனைவி சரஸ்வதி (65). இவரது வீட்டு சுற்றுச் சுவரில் வியாழக்கிழமை காலை முகமூடி அணிந்த இளைஞர் ஏறிக் குதித்து உள்ளே புகுந்து, சரஸ்வதியிடம் கத்தியைக் காட்டி மிரட்டி, அவரது தங்கச் சங்கிலியைப் பறிக்க முயன்றார். இதையடுத்து சரஸ்வதி அவரைத் தள்ளிவிட்டு, சத்தமிட்டவாறு வெளியே ஓடி வந்தார். இதையடுத்து அக்கம்பக்கத்தினர் அவரைப் பிடித்து தாக்கி, தகவலறிந்து சென்ற கிழக்கு காவல் நிலையத்தினரிடம் ஒப்படைத்தனர். விசாரணையில் அவர் சரஸ்வதியின் பக்கத்து வீட்டைச் சேர்ந்த மோகன் மகன் கார்த்திகேயன் (29) எனத் தெரிய வந்தது. புகாரின்பேரில் காவல் துறையினர் வழக்குப் பதிந்து கார்த்திகேயனைக் கைது செய்தனர்.

அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரி கறம்பக்குடி அருகே கிராம மக்கள் மறியல்

ஆலங்குடி,ஆக.29: புதுக்கோட்டைமாவட்டம், கறம்பக்குடி அருகே அடிப்படை வசதிகள் கோரி கிராம மக்கள் வியாழக்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

கறம்பக்குடி அருகேயுள்ள துவார் ஊராட்சி, பெத்தாரிப்பட்டி கிராமத்தில் சுமார் 300 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். அப்பகுதி மக்களுக்கு 100 நாள் வேலை, அதற்கான ஊதியத்தை முறையாக வழங்குவதில்லையாம். மேலும், குடிநீர், சாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவில்லையாம். இதுகுறித்து பலமுறை ஊராட்சி நிர்வாகத்திடம் முறையிட்டும் நடவடிக்கை இல்லையாம். இதனால் அப்பகுதி மக்கள் துவார் பேருந்து நிறுத்தம் அருகே சாலை மறியலில் ஈடுபட்டனர். தொடர்ந்து அங்கு சென்ற மழையூர் போலீஸார், ஒன்றிய அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுப்பதாக அளித்த உறுதியளிப்பை ஏற்று போராட்டத்தில் ஈடுபட்டோர் கலைந்து சென்றனர். மறியலால் புதுக்கோட்டை-கறம்பக்குடி சாலையில் சுமார் 1 மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

SOUTH INDIAN Bank
Experience Next Generation Banking

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவகம்:
முதல் மாடி, YMCA பில்டிங், அல்லேபோயா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ- ஏல விற்பனை அறிவிப்பு

Ref.: RO/SAR/SN/77/2024-25 தேதி: 28.08.2024

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

லேட். **திரு.S.மாஸ்கோ** [M/s.மாஸ்கோ உட் ஓர்க்ஸ் உரிமையாளர்] என்பவருடைய சட்டவாரிசுகள்:

1) திருமதி. செல்வராணி. [W/o.S.மாஸ்கோ, M/s.மாஸ்கோ உட் ஓர்க்ஸ் உரிமையாளர்], எண். 119, கோட்டை அல்லா கோவில் தெரு, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், தமிழ்நாடு-614601. மேலும் இருப்பிடம்: படம்பைகாடு, மதுக்கூர் ரோடு, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், தமிழ்நாடு-614903.

2) திரு.வல்லரசு. S/o. திரு.மாஸ்கோ, [இவருடைய இயற்பாதுகாவலர் திருமதி.செல்வராணி என்பவரால் மைனர் என குறிப்பிடப்பட்டவர்], எண். 119, கோட்டை அல்லா கோவில் தெரு, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், தமிழ்நாடு-614601.

3) திரு.தமிழரசு. S/o. திரு.மாஸ்கோ, [இவருடைய இயற்பாதுகாவலர் திருமதி.செல்வராணி என்பவரால் மைனர் என குறிப்பிடப்பட்டவர்], எண். 119, கோட்டை அல்லா கோவில் தெரு, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், தமிழ்நாடு-614601.

உத்திரவாதி: 4) திருமதி.திவ்யா. W/o. மணிகண்டன், எண். 105, கோட்டை அல்லா கோவில் தெரு, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர்-614601.

தி சௌத் இந்தியன் வங்கி லிட், பட்டுக்கோட்டை கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாள சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) / உத்திரவாதி(கள்) ஆகியோர் 26.07.2024 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், பட்டுக்கோட்டை கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.27,03,456.34-ஐ (ரூபாய் இருபத்தேழு லட்சத்து மூன்றாயிரத்து நானூற்றி ஐம்பத்தாறு மற்றும் பைசா முப்பத்து நான்கு மட்டும்) பின்வரும் மற்றும் செலவினங்களுடன் வருவிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 18.10.2024 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தாரர் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்:	**திரு. மாஸ்கோ** [தற்போது இறந்துவிட்டபடியால், திருமதி.செல்வராணி, மைனர்.வல்லரசு, மைனர்.தமிழரசு ஆகியோர் சட்டவாரிசுகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்]

சொத்து விபரம்: தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுகா, அணைக்காடு கிராமம் எண்.69, சர்வே எண்.39-3C-ல் அமைந்துள்ள 12197 சதுரடி அளவுள்ள இடத்தின் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அத்துடன் இணைந்துள்ள அனைத்தும் சேர்த்து திரு.மாஸ்கோ [தற்போது இறந்துவிட்டபடியால், திருமதி.செல்வராணி, மைனர்.வல்லரசு, மைனர்.தமிழரசு ஆகியோர் சட்டவாரிசுகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்] என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, பட்டுக்கோட்டை SRO Joint I-ல் 05.10.2020 தேதியிட்ட விற்பனைப் பத்திர எண்.1474/2020-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: முத்துப்பேட்டை நார் ரோடு, கிழக்கே: தார் ரோடு, தெற்கே: R.அந்தோணிசாமியின் சொத்து, மேற்கே: புது ஆறு (New River).

ந